குயில்

கிழமை இதழ்

ஆசிரியர் : பாரதிதாசன்

விலை 13 காசு

ஞாயிறு 1-6-58

தமிழர் எழுக!

தமிழ்நிலத்தில் தமிழான பயிர்விளைச்சல் குறைவு !
தமிழ்நிலத்தில் அயல்மொழியாம் களைவிளைச்சல் மிகுதி !
தமிழ்நிலத்தில் தமிழ்க்கொள்கை எனும்விளைச்சல் குறைவு !
தமிழ்நிலத்தில் அயற்கொள்கைக் களைவிளைச்சல் மிகுதி!
தமிழ்நிலத்தில் தமிழ்ஒழுக்கப் பயிர் விளைச்சல் குறைவு !
தமிழ்நிலத்தில் அயலொழுக்கக் களைவிளைச்சல் மிகுதி !
தமிழர்களே ! களைநீக்க வேண்டாமா? —உங்கள்
சமையஉளத் தாலன்றித் தமிழுளத்தால் சொல்க !

தமிழ்நிலத்தில் "மக்கள் நிகர்" எனும்விளைச்சல் இல்லை !
தமிழ்நிலத்தில் சாதியெனும் களைவிளைச்சல் மிகுதி
தமிழ்நிலத்தில் "ஒன்று தெய்வம்" எனும்விளைச்சல் குறைவு !
தமிழ்நிலத்தில் உருவணக்கக் களைவிளைச்சல் மிகுதி !
தமிழ்நிலத்தில் "தன்னுரிமை" எனும்விளைச்சல் இல்லை !
தமிழ்நிலத்தில் அயலாட்சிக் களைவிளைச்சல் மிகுதி !
சமையஉளத் தால்இதனை எண்ணித்தூங் காதீர் !
தமிழுளத்தால் எண்ணிடுவீர் களைநீக்க எழுவீர் !

★

குரல்: 1. இசை: 1.

புதுச்சேரி, தி. வ. ஆ 1989 வைகாசி 19

“குயில்”

குயில் மீண்டும் வெளிவருகின்றது. தமிழர்கள் ஆதரிக்க.

குயில் பாட்டும் உரைநடையுமாக வெளி வரும்.

குயில் தமிழின் அருமை பெருமைகளைக் கூறும், தமிழ்மேல் பகைவர் வீசிய–வீசுகின்ற குப்பைகட்குப் புயலாகும். அதன் உண்மை அழகுக்கு விளக்காகும்.

குயில் தமிழறம் தமிழொழுக்கம் முதலி யவை இன்னவை யென்றும், சாதி என்ற அழுக்கற்றவர் தமிழர் என்றும் பாடும்.

குயில் எல்லாம் உடையவர் தமிழர் என் னும். அவர்பால் இன்று இல்லாதது ஒற்றுமை உணர்ச்சி ஒன்றே என்னும்.

குயில் தமிழரின் நல்வாழ்வு **தமிழ்நாடு விடுதலை பெறுவதில்தான்** இருக்கின்றது என்ற உண்மையைத் தமிழர் உணரச்செய்யும்.

குயில் அரசியற் சோலையில் புகும். மக்களியல் மாந்தளிர் உண்ணும், பொருளியற் பண் பாடும்.

குயில் படிப்போர்க்கு ஒன்று :

குயிலில் பிறரால் எழுதப்படும் பாட்டு உரைநடைகட்கு அவரின் புனை பெயர் அல்லது இயற்பெயர்இட்டிருக்கும். ஆசிரியரால் எழுதப்படுவனவற்றிற்குப் புனைபெயரோ இயற்பெயரோ இரா.

குயில் பற்றி ஏட்டாசிரியர்க்கு ஒன்று :

குயிலில் வெளிவரும் ஒரு பாட்டையோ ஒரு கட்டுரையையோ மட்டும் தம் ஏட்டில் எடுத்தாளலாம்.

குயில்பற்றி நூலாசிரியர்க்கும், நூல் வெளியிடுவோர்க்கும் ஒன்று:

குயிலினின்று பாட்டையோ கட்டுரை யையோ, அவற்றின் ஒரு பகுதியையோ முழுதையுமோ எடுத்தாள ஆசிரியர் ஒப்புதல் வேண்டும்.

குயில் பற்றிப் படக்கலை ஆசிரியர்க்கு ஒன்று:

பாட்டையோ உரைநடையையோ அவற்றில் ஒரு சொற்றொடரையோ அப்படியே கையாள்வதும், சொல்லை மாற்றிக் கையாள் வதும் சழக்கு.

இன்றியமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல். (குறள்)

தமிழன் யார்?

தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவன் தமிழன், ஒருவன் தமிழ்பேசுகின்றவனாகலாம். தமிழ் படித்திருக்கலாம். அவன் தமிழனின் அண்டை வீட்டுக் காரனாகவும் இருக்கலாம். இக்காரணங்களைக் கொண்டே அவனைத் தமிழன் என்று கொள்வது பெரும் பிழை. அவனைநோக்கி உன் தாய் மொழி எது என்று கேட்டால் அதற்கவன், என் தாய்மொழி சமசுகிருதம் அல்லது இந்தி அல்லது பிரான்சு, அல்லது ஆங்கிலம் என்பானானால் அவனைத் தமிழன் பட்டியலில் சேர்ப்பது இழுக்கு.

இனி,

தமிழ்நாட்டைத் தாய்நாடாகக் கொண்டவன் தமிழன்.

ஒருவன் ஆயிரமாண்டாகத் தமிழ்நாட்டில் இருந்து வரலாம் நான் தமிழன்என்னும் வாழைக்குக் கீழ்க்கன்று என்று சொல்லிக் கொள்ளலாம். அவன் தமிழ்நாட்டில் தன்புகழை நாட்டியிருக்கலாம் அவனை நோக்கித் தமிழரை மிதித்துக் கொண்டிருக்கும் பகை நாட்டானின் செயல் அறமா என்று கேட்டால் அறமே என்பான். அவன் என்ன நினைக்கின்றான் எனில், தமிழனுக்குப் பகை நாட்டானாயிருந்தாலும் நம்மை ஆதரிக்கும் நம்முறவு நாட்டான்தானே என்று எண்ணுகின்றான்.

தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்று தனி இயக்கமும் கண்ட என் நண்பர் ஒருவர், "இரண்டாவதுலகப்போர் நடந்த போது சென்னையில் இருந்த வட நாட்டார், தம் வடநாட்டை நோக்கி ஓடிவிட்டார்கள். அப் போதும், தென்னாட்டை விட்டுப் பார்ப்பனர் ஓடவில்லை. ஆதலால் பார்ப்பனர் தமிழரே" என்று கூறினார்.

நண்பர் முடிவு தீய விளைவுக் குரியது. புறாப்பண்ணையைவிட்டுக் கழுகு நகரவில்லையானால் கழுகு. புறாவாகிவிடாது.

இனி,

தமிழருக்குரிய அடிப்படை ஒழுகலாறுகள், வாழ்க்கையில் இயற்கையாய் அமையப் பெற்றவன் தமிழன்.

தமிழர் ஒழுகலாறுகளில் சில வருமாறு:

ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் என்பது தமிழர் ஒழுக்கம்.

திருமகன் அருளப் பெற்றுத்
திருநிலத் துறையும் மாந்தர்
ஒருவனுக்கு ஒருத்தி போல
உளமகிழ்ந்து ஒளியின் வைகிப்
பருவரு பகையும் நோயும்
பசியும் கெட்டொழிய. இப்பால்
பெருவிறல் வேந்தர் வேந்தற்கு
உற்றது பேசலுற்றான்

(சீவகசிந்தாமணி 2377)

என்ற செய்யுளில் ஒருவனுக்கு ஒருத்திபோல உளமகிழ்ந்து என்ற தொடரைநோக்குக; ஒருத்தி ஒருவனையே மணக்க வேண்டும் என்பது பெறப்படுகின்றது. ஒருத்தி ஆடவர் பலரை மணப்பதும் உலகில் உண்டோ என்று கேட்கலாம். உலகில் என்ன? தமிழ் நாட்டில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள திரௌபதி எப்படி? அவள் ஐவரை மணந்தவள். அதனால் பெரும் பழிப்பை ஏற்றவர் அல்லரோ ஐவர். அதனாலன்றோ,

படுபழி மறைக்கல் ஆமோ
பஞ்சவர் அன்று பெற்ற
வடுஉரை யாவர் பேர்ப்பார்?
வாய்ப்பறை யறைந்து தூற்றி
இடுவதே யன்றிப் பின்னும்
இழுக்குடைத் தம்ம காமம்
நிடுவுநின்று உலகம் ஓம்பல்
நல்லதே போலும் என்றான்.

எனச் சிந்தாமணியும் ஐவர் ஒருத்தியை மணந்ததைச்சிரித்தது.

இனி,

ஒரு தீய செயல் செய்துவிட்டுப் பின் அதற்குக் கழுவாய் தேடும் தீயொழுக்கம் தமிழர்பால் இல்லை இதனால் அன்றோ திருவள்ளுவர்,

எற்றென்று இரங்குவ செய்யற்க
செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

என்று கழுவாய் முறையை இகழ்ந்துரைத்தார்.

இனி,

பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை மக்கள் நிகர் என்று ஒழுகுவது தமிழர் ஒழுக்கம்.

பிறப்பு ஒக்கும், எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால் என்ற திருக்குறளை நோக்குக.

பிறவியில் உயர்வு தாழ்வு பேசுவது ஆரியர் ஒழுக்கம்.

நால்வகைச் சாதி இந்
நாட்டினில் நாட்டினீர்.

என்று கபிலர் ஆரியர் கொள்கையை இழித்துரைப்பதும் நோக்கத்தக்கது.

(10-ஆம் பக்கம் பார்க்க.)



முதுமாலைப் போதில்..!

மலர்ந்ததடி அல்லி - அதோ
வந்ததடி நிலவு
குலைந்ததடி என்பொறுமை கொல்லாதே!
கொஞ்சி விளையாட அட்டி சொல்லாதே!

விலகிற்றடி வெப்பம் - இதோ
வீசுகின்றது தென்றல்
தலைசுழற்றிடும் என்ஆசை தட்டாதே!
தாவும்கையை விலக்கிஎன்னைத் திட்டாதே!

கமழ்ந்ததடி முல்லை - இதோ
காணடி நம்தனிமை
அமிழ்துகொடு நின்உதட்டை ஆட்டாதே!
அன்பு மறைத்து வன்புமுகம் காட்டாதே!

நமக்கென்னடி குறைவு? - இது
நல்ல முதிய மாலை
தமிழுமுண்டு காதலுண்டு தள்ளாதே!
தழுவுந்தோறும் மகிழ்ச்சி பொங்கித் துள்ளாதே!

வந்தவர் மொழியா?
செந்தமிழ்ச் செல்வமா?

காட்சி

தமிழ்ச்சொற்களையெல்லாம் வடசொற்கள் என்று ஆக்குவதில் பார்ப்பனர்க்குத் தனி ஆசை. அவ்வாறு செய்வதால் இந்நாட்டுக்கும் அவர்கட்கும் இல்லாத தொடர்பை உண்டுபண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தத் தீய முயற்சியை அறிவுடைய தமிழர்களும், நடுநிலையுடைய உலகமும் அறிந்து நகையாடக்கூடுமே யென்பதை அவர்கள் கருதுவதே யில்லை.

தூங்கிக்கொண்டிருந்தார்கள் தமிழர்கள். அது அந்த நாள். பார்ப்பனர் அல்லல் புரிந்தார்கள் அளவில்லாமல்.

விழித்துக்கொண்டார்கள் தமிழர்கள். இது இந்த நாள். அல்லல் புரியாது அடங்கினார்களா எனில் இல்லை.

காட்சி – தொழிற்பெயர். அதில் காண், முதனிலை. சி தொழிற்பெயர் இறுதிநிலை. காண் என்பதின் இறுதியிலுள்ள ண், என்ற மெய்யானது சி, என்ற வல்லினம் வந்தால் ட் ஆகும் என்பது சட்டம். அதனால் தான் காட்சி என்றாயிற்று. காணல், காண்டல், காட்சி அனைத்தும் ஒரே பொருள் உடையவை. எனவே காட்சி தூய தமிழ்ச்சொல். இதைப் பார்ப்பனர் தம் ஏடுகளில் காக்ஷி என்று போடுவார்கள். காட்சியைக் காக்ஷிஆக்குவதில்- தமிழ்ச்சொல்லை வட சொல் ஆக்குவதில் அவர்கட்குள்ள ஆசை புரிகிறது அல்லவா? இவ்வாறு காக்ஷி என்று பார்ப்பனர்கள் தம் ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதால் நம்மவர்களும் அதையே பின்பற்றத் தொடங்கி விடுகிறார்கள். பார்ப்பான் சொன்னது பரமசிவன் சொன்னதல்லவா? அதனால்தான் நாம் பொதுவாக நம்மவர்கட்குச் சொல்லுகிறோம்;

தமிழ் தமிழர்க்குத் தாய்! தமிழிற் பிழை செய்வது தாயைக் குறைவு படுத்துவதாகும். படக் காட்சிக்குரிய அறிவிப்போ, திருமண அழைப்பிதழோ வாணிக அறிவிப்புப் பலகையோ எழுதும்போது தமிழறிஞர்களைக் கலந்து எழுதுங்கள் என்கிறோம்.

இனி, இவ்வாறு தமிழ்ச்சொற்களையெல்லாம் பார்ப்பனர் வட சொற்கள் என்று சொல்லிக்கொண்டு போகட்டுமே. அதனால் தீமை என்ன என்று தமிழரிற் சிலர் எண்ணலாம்.

அவ்வாறு அவர்களை இந்நாள்வரைக்கும் விட்டுவைத்ததால் என்ன ஆயிற்றுத் தெரியுமா? வடமொழியினின்றுதான் தமிழ் வந்தது வடவர் நாகரிகத்திலிருந்துதான் தமிழர் நாகரிகம் தோன்றியது என்றெல்லாம் அவர்கள் சொல்லுவதோடு அல்லாமல் உலகையும் அவ்வாறு நம்பவைக்கவும் முயலுகிறார்கள்.

அது மட்டுமா? மேற்சொன்ன காரணங்களைக் காட்டி அவர்கள் பிறப்பிலேயே உயர்ந்தவர்கள் என்னும் முடிச்சுமாறித் தனத்தையும் மெய் என்று நிலைநாட்டி வருகிறார்கள்.

இது வட சொல்லன்று இன்ன காரணத்தால் இது தமிழ்ச்சொல் என்று விளக்கிவர முடிவு செய்துள்ளோம். தமிழர்கள் ஊன்றிப்படிக்க.

கணம்

இயல்பாக ஒருவன் கண் இமைக்கும் நேரத்திற்குப் பெயர். இச்சொல் கண் என்பதிலிருந்து பிறந்தது. கண் அம் கணம் ஆகி.

(12–ஆம் பக்கம் பார்க்க.)

கைத்தறி ஆடை

ஆடையிற்சி றந்ததுகைத் தறிஆடை — மக்கள்
அனைவர்க்கும் நல்ல தந்தத் தேனோடை
ஓடையில் தேனைஅள்ளி உண்ண வாரீர் — அள்ளி
உண்டு கைத்த றிக்குதவி பண்ணவாரீர்

சேலையிற்சி றந்துகைத் தறிச்சேலை — அது
தேவைக்கு ரியவண்ண மலர்ச்சோலை — குளிர்
சோலைவண் ணமலர்கள் வாங்க வாரீர் — நம்
தூய கைத்த றித்தொழிலைத் தாங்க — வாரீர்

வேட்டியிற்சி றந்ததுகைத் தறிவேட்டி — கலை
வெற்றிக்கெல் லாம்அதுவே வழிகாட்டி — புகழ்
காட்டும் கலைக்குநலம் காட்ட வாரீர்.
கைத்தறித்தொ ழிலைநிலை நாட்ட — வாரீர்.

எந்நாட்டினும் தென்னாட்டுக் கைத்தறித் தொழில் — திசை
எட்டும் பரப்பியது தன்பே ரெழில் — நம்
தென்னாட்டுக் கைத்தறித் தொழில் ஓங்க — ஓங்கச்
செல்வநிலை யும்கலையும் தழைத்தோங்கும்.

அறுவரைக் கொன்ற அரசியல் வீழ்க!

அறுப தாயிரம் ஆண்டுமுன் இருந்தஓர்
கல்லா யுதத்தை இன்றைய அரசினர்
கண்டு பிடித்துக் கையாள் கின்றனர்
அவ்வா யுதத்தை ஆராய்ந் தவர்அது
காட்டு மிராண்டித் தனம்என்று கண்டனர்.

எதியப் பட்டவர் இரும்பு டம்பையும்
அறிஞர் ஆக்கிய நீதி தன்னையும்
அரசியல் ஒழுக்கம் அறம் எவற்றையும்
கிழித்துக் கொண்டு கிடுகிடு வென்று
பாய வல்லதாம் அரசினர் படைஅது!

ஒவ்வாச் சாதி ஒழிய வேண்டினர்
அவ்வழிக் கிளர்ச்சி அறத்தாற் புரிந்தனர்
அவ்வளவே தான், அவ்வளவே தான்!
கடுக டுத்தது காட்டுமிராண் டித்தனம்
சிறைப்பட் டவர்கள் சிறுவயிற் றுக்குக்
கூழு மிழந்தபின் குடலு மிழந்தனர்
நாலா யிரவரில் அறுவர் நல்லுடல்கள்
தோலா யினவே, தோற்றன உயிரையே.

தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளராம்
தமிழரைச் சாவின் வாயில் தள்ளிற்றுக்
காட்டு மிராண்டித் தனம்அது கண்டோம்
வீழ்க இன்றைய இந்தியப்
பாழாம் அரசியல் படுக்கை எழாமே!

பெரியார்

செயற்க ருஞ்செயல் செய்தல் வேண்டும்;
பெறற்க ரும்புகழ் பெறுதல் வேண்டும்!

பிறவியிற் சாதி உண்டெனப் பிதற்றியும்,
அறிவை அழித்தும், ஒற்றுமை அழித்தும்,
தமிழகம் உலகம் உமிழக மாகி
ஒழியவும். நாடோறும் அழிவு செய்துவரும்
அயலான் அடியை அடையப் பெறுவது
செயற்க ருஞ்செயல் செய்வ தாகுமா?
பெறற்க ரும்புகழ் பெறுவ தாகுமா?

தன்இனம் தன்மொழி தன்நாடு தன்கலை
இன்ன வற்றின் உயர்வை இழிவெனப்
பிறருளம் மகிழப் பேசி வாழ்பவன்
துணைவேந்த னாயினும். தமிழின் துறைக்குத்
தலைவ னாயினும். அந்தத் தமிழன்
செயற்கரு மூறு செய்தவ னாவான்.
பெறற்க ரும்பழி பெற்றவ னாவான்.

ஆயிர மாயிர மாண்டுக ளாகத்
தீய சாதிஇந் நாட்டைத் தீய்ப்பதை
ஆயிர மாயிர மாண்டுக ளாகத்
தூயவர் முயன்றும் தொலைத்தா ரில்லை.
அதனால் இந்த அழகிய தமிழகம்
மதிப்பற்று வாழ்வு மங்கி வருவதும்
உலகம் அறிந்த ஒன்றாம்! இன்று
நிலையிற் றமிழரை உயர்த்தவும் நீங்கா
மாசு நீக்கவும் வந்த பெரியார்
அறப்போர்ப் பறைமுழக்கு அதோகேட் கின்றது!

அறப்போர்!

தொல்சீர்த் தமிழர்க்கு நல்ல வாய்ப்பிது!
செயற்க ருஞ்செயல் செய்தல் வேண்டும்;
பெறற்க ரும்புகழ் பெறுதல் வேண்டும்!
கல்வி அமைச்சரோ, செல்வ அமைச்சரோ,
இயன்ற மட்டும் பங்கை ஏற்க:
அப்பெரும் போரில் அறப்படை யணியில்
கடைசி வரிசையிற் காணும் தொண்டனின்
செருப்புத் துடைப்பதோர் செயலை யேனும்
செய்க அஃது செயற்கரும் செயலே !
பெறுக அதனால் பெறற்கரும் புகழே!

ஆலைக் காரர் ஆகுக; அவர்தம்
தோலைக் காசுக்குத் தொலைப்பார் போலப்
பெரியார் அறப்போர்ப் பெரும திப்பினைச்
சிறிதென இளிப்பது நீக்கித் திருந்தித்
தொண்டரொடு தொண்டு செய்து கிடக்க!
சட்டை மாட்டித் தலைக்கணி செய்து
பட்டு டுத்துப் பகட்டுமோர் தமிழனும்
"என்னினும் தாழ்ந்தவன் என்னும் ஆரியன்
தன்னினும் தாழ்ந்தவன் நான்நான் நான்எனும்"
மடமை மாய்வ தெந்தநாள்? தமிழன்
கடமை உணர்வ தெந்தநாள்? அந்தநாள்
இந்தநாள்! அரியது செய்க!
நந்தம் **பெரியார்** படையொடு நடக்கவே!

★

ஆசிரியருக்கு அஞ்சல்

வள்ளுவர் உள்ளம்

முறைகோடி மன்னவன் செய்யில் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்

இக் குறளின் கருத்து என்ன?

அரசன் முறை தவருக நடப்பானுயின், நீர்த் தேக்கங்கள் சீர்கேடு அடையும் காரணத்தால், அந்நீர்த் தேக்கங்கள் வானம்பெய்வதைத் தேக்கிவையா. —என்பது

பரிமேலழகர், அரசன் முறை தவருக நடந்தால் மழை பெய்யாது என்று பொருள் கூறுகிருரே என்ருல் அது பொருந்தாது என்றுதான் நாம் கருதுகின்ருேம்.

நாம் கூறும் பொருளே பொருந்துவதாகும் என்பதை அடுத்த இதழில் விளக்குவோம்.

கேள்வி கேட்ட தமிழ்ப் புலவர்க்கு ஒன்று சொல்ல விரும்புகிருேம்.

திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற நம் உரை அச்சாகி வருகிறது. மேலே புலவரால் கேட்கப் பட்டது போன்ற மிகப்பல குறட் பாக்களுக்கு அதில் பொருள் கிடைக்கும்.

அச்சாகி வருவதற்குள் தனித் தனியே இப்படிப் பொருள் கூறும்படி கேளாதிருக்க வேண்டுகிருேம்.

தமிழன் யார்?.........

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணுமை நன்று.

என்ற வள்ளுவர் வாய்மொழி காண்க.

தீய வழியில் ஒன்றைத்தேடி யடைதல் தமிழர் பால் இல்லை. இதனுல்,

இன்றி யமையாச் சிறப்பின வாயினும்
குன்ற வருப விடல்.

என்ருர் வள்ளுவரும்.

தொல்லை நோர்ந்துழி அல்ல புரியலாம் என்று மநுநூல் கருது கின்றதும் கருதத்தக்கது.

இங்குக் காட்டிய தமிழரின் ஒழுகலாறுகளில் சிலவற்றை இந்நாள் தமிழர் கைவிட்டும் இருக்கலாம். ஆயினும் கைவிட்டவர்கள் வழுக்கி விழுந்தவர்களே யன்றி அவர்களின் உள்ளத்தின் இயற்கை நிலையினின்றும் மாறினவர் அல்லர்.

எனவே-

தமிழன் யார் என்பதற்கு விடை கீழ் வருமாறு:

தமிழே தாய்மொழி, தமிழ் நாடு தாய் நாடு, தமிழர் ஒழுக்கம் தன தொழுக்கம்.

என்னும் இம் மூவகைப் பேறும் பெற்றவன் தமிழன். மற்றவன் பிறனே.

நல்லறம் வாழ்க!

கொல்லாமை ஒன்று! கொல்லல் ஒன்று!
முன்னதே நன்றென முதன்முதல் சொன்னவன்
நானில நாக ரிகம்தொடங் கியவன்

அறநெறி ஒன்று பாவம் ஒன்று
முன்னதால் மன்னுயிர்க் கின்னாசெய் யாமையை
உலகிற்கு முகற்கண் உரைத்தவன் எவனோ
அவன்நாக ரிகத்தைத் தொடங்கிய அறவோன்

இரக்கம் ஒன்றுமற் றிரங்காமை ஒன்று
முன்னதால் உயிர்க்கெலாம் இன்னல்செய் யாமையை
வையத்து முதலில் வழுத்திய மேலோன்
நாகரிக வித்து நாட்டிய பெரியோன்

உடலால் சொல்லால் உளத்தால் உயிர்கட்குக்
கெடுதல்செய் யாமையை முதன்முதற் கிளத்தியோன்
சமணறத் தலைவனே யாயின் அன்னோன்
இவனாறும் உயிர்க்கெலாம் அருள்தந்தை ஆவான்

இன்னுயிர்க் கின்னா செய்தலே அறமென
முன்னர் ஆரிய நான்மறை மொழிந்தோர்
மக்கட் கருவழி நச்சுப் பூச்சிகள்
என்பதை எண்ணுங் காலை மன்னுயிர்க்
கின்னாசெய் யாமையை இனிதுரைத் தவனை
என்னென்று போற்றுதும் என்னென்று போற்றுதும்

சமணறம் தமிழால் தமிழர்க்கு நல்க
"நல்லறம்" என்னும் நல்லிதழ் வந்தது
நாம்அதை வரவேற் கின்றோம்
பூமிசை வாழ்க என்று புகன்றே.

("நல்லறம்" 14–5–58

வந்தவர் மொழியா ?.........

அது கண்ணிமைக்கும் நேரத்திற்கானதை ஈறு திரிந்ததோர் ஆகு பெயர் என்பர்.

இவ்வாறு கண் என்பது அம் பெறுமலே கண்ணிமைப்போது என்ற பொருள் தருவதும் உண்டு.

"கயற்கணின் அளவும் கொள்ளார்."
(சீவக சிந்தாமணி 1393)

என்று வந்துள்ளதும் கருதத்தக்கது. எனவே கணம்; வந்தவர் சொல்லன்று. செந்தமிழ்ச் செல்வமே என்று கொள்க.

இதைப் பார்ப்பனர் க்ஷணம் என்ற வட சொல்லின் சிதைவு என்று கூறுவார்கள் கணமும் க்ஷணமும் ஏறத் தாழ ஒத்திருக்கின்றன. கணம் என்ற தமிழ்ச்சொல் பழந்தமிழ் நூல்களில் நாம் எடுத்துக் காட்டியவாறு காரணப் பெயராய் வந்துள்ளது. இந்நிலையில் நாம் அறியவேண்டியது என்னவெனில், வந்தவர் நம் தமிழாகிய கணத்தை க்ஷணம் என்று தம் வாய்க்கு வந்தவாறு சொல்லிக்கொண்டார்கள் என்பதே.

தானம்

தன்மை என்பது மை ஈற்றுப் பண்புப் பெயர் ஆகும். மை ஈற்றுப் பண்புப் பெயர்கள் அனைத்தும் பல மாறுதல்களை அடையும்.

"ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
ஆதி நீடல் அடி அகரம் ஐயாதல்
தன் ஒற்று இரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனம மிகல் இனையவும் பண்புக் கியல்பே"

என்ற நன்னூற்பாட்டினால் இன்னின்ன மாறுதல் அடையும் என்பது அறிக. மேற்சொன்ன தன்மை என்ற பண்புப் பெயர் ஈறுபோதல் என்ற சட்டத்தால் மை கெட்டுத் "தன்" என நின்றது. அந்தத் தன் என்பது ஆதி நீடல் என்ற சட்டத்தால் தான் என நீண்டு நின்றது. அந்தத் தான் என்பது அம் என்ற பண்புப் பெயர் இறுதி நிலை பெற்றுத் தானம் ஆயிற்று. தானம் என்பதன் பொருள் தன்மை. உயர்வு என்பன. எனவே தானம் என்பது கொடைத்தன்மை என்று உணர்தல் வேண்டும்.

தானம் என்பது ஈண்டுக் காட்டிய பொருளில் அமைந்திருப்பதை அடியில் வரும் சிந்தாமணி (2924) ச் செய்யுளாலும் அறியலாம்.

கருங்கடற் பிறப்பின் அல்லால்
வலம்புரி காணுங் காலைப்
பெருங்குளத் தென்றும் தோன்று
பிறைநுதல் பிணையி னீரே
"அருங்கொடைத் தானம்" ஆய்ந்த
அருந்தவம் தெரியின் மண்மேல்
மருங்குடை யவர்கட் கல்லால்
மற்றையர்க் காவ துண்டோ

இச்செய்யுளில் வந்துள்ள அருங்கொடைத் தானம் என்ற தொடர், மேலே நாம் காட்டிய வண்ணம் தானம் என்பது தன்மை என்று பொருள் படுவது காண்க.

எனவே தானம் என்ற சொல் தூய தமிழ்ச் சொல் அன்றோ?

இதைப் பார்ப்பனர் வடசொல் என்று கயிறு திரிப்பார்.

தானம் என்ற சொல் வடவர் இலக்கியத்திலும் இருக்கின்றதே எனில், ஆம் வந்தேறிகளாகிய வடவர் தமிழினின்று எடுத்துக் கொண்டார்கள் என்றே அறிய வேண்டும்.

திருத்துக.

பக்கம் 6, வரி 5.
சோலையிற் சிறந்து என்றிருப்பதைச் சோலையிற் சிறந்தது என்றும்

பக்கம் 13, வரி 9.
எழுதல் என்றிருப்பதை ஏகுதல் என்றும் திருத்திப் படிக்க.

குறிப்பு : பக்கம் 13, வரி 1. இயங்கி என்பது பஸ்.

திருக்குற்றால

மலை நீர் வீழ்ச்சி!

அழகிய இயங்கிளம் அனைவர் தம்மையும்
தழல்பெயும் கோடைக் கொடுமை நீக்கச்
சுமந்து விரைந்து பலகல் தொலைவைக்
கடந்ததும் கனலினின்று புனலிற் குதித்த
ஒருநிலை கண்டோம்; திருக்குற் றாலம்
இன்னும் அரைக்கல்லே என்ற னர்.பின்
பசுந்தழை அடர்மரப் பந்தற் கீழ்,குளிர்
பிசைந்த வழியேகி நின்ற தியங்கி
இனியாம் நடந்தே எ[illegible]தல் வேண்டும்
நானும் நேயரும் சிறிது நடந்ததும்
வான்கீழ் வெளியை அழகால் மறைத்த
திருக்குற் றால மலைநீர் வீழ்ச்சி
இதோபார் என்றனர்! எதிர்நின்று நோக்கினேன்
பொன்வெயில் தழுவிய நன்மே னியுடன்
நின்றி ருந்தாள் நெடியோள் ஒருத்தி
அன்னவள் மென்குழல் அணிமலர்ச் சோலையாய்
விண்ணிடை விரைந்து நறுமணம் விரிக்கும்
ஆட வில்லை அசைகிலள் விடாது
பாடிக் கொண்டே இருந்தாள் பண்ணொன்று!
" தமிழ்வாழ்ந் தால்தான் தமிழர் வாழ்வார்,
சாதிநோய் தவிர்க தமிழனே, என்றும்
தமிழ்மீண் டால்தான் தமிழ்நாடு மீளும் "
என்ற முழக்கம் எழுச்சியைச் செய்ததால்
தூய்தமிழ் மக்கள் தொடர்ந்தனர்! சூழ்ந்தனர் !
சுடர்படு முதியோள் தோளி னின்றும்
அடிமிசை வீழ்ந்து புரளும் சலசலப்
பொன்னா டைதனில் ஆடினர்
" அன்னாய் அகம்புறம் குளிர்ந்தோம்! " என்றே.

அவன் புகழ் வாழ்க

சண்டே அப்சர்வர் ஆசிரியர், பி. பாலசுப்பிரமணியனார்
பிரிவு பற்றியது

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
எனும்உண்மை உணர்ந்தவன்! தமிழைக்
கொன்றே பிழைப்பவர்; தமிழர்ஒற் றுமையைக்
குலைத்துமே அவர்தம துடைமை
தின்றே பிழைப்பவர் ஆகிய பார்ப்பன
ஓநாய்கள் வெற்றியில் திரிந்த
அன்றே எதிர்த்தவன்! அணிவீரன்! பால
சுப்பிர மணியனை 'இழந்தோம்'.

நாடுண்டு கூட்டத் தமிழர்கள் உண்டு
நல்ல "வில்" சண்டே அப்சர்வர்
ஏடுண்டு "கூரம்" பெழுத்துண்டு கையில்
"எங்கந்தப் பார்ப்பன நரிகள்?
கேடுண்டு போகட்டும்,, எனத்தன துடம்பு
கிழத்தனம் அடைந்திடும் வரைக்கும்
பாடென்ப தெல்லாம் பட்டவன் பால
சுப்பிர மணியனை இழந்தோம்.

தமிழரின் தலைவரைப் பெரியாரைச் சாதிச்
சழக்கராம் அரசினர் சிறைக்குள்
அமிழ்த்தது கேட்டே எழும்பூர் கூட்டத்
தலறியே ஓடிடும் போது
"நமக்கென்ன,, எனத்தடுத் திட்டஅண் ணாத்துரை
நன்றியில் சொல்லுமிழ்ந் தே, தன்
தமிழ்த்தன்மை காட்டினான் தகுதிமிக் கான் பால
சுப்பிர மணியனை இழந்தோம்.

ஆங்கிலந் தன்னிற் பேச்சாளன்; எழுத்தாளன்;
ஐந்தாறு மொழியறி வுடையான்!
தாங்காத வறுமைதான் தாக்கினும், பார்ப்பனர்
தாக்கினும் தமிழர்க்கு நேர்ந்த
தீங்கினைத் தீர்ப்பதில் தளர்கிலான் பால
சுப்பிர மணியனை இழந்தோம்.
ஈங்கெவர் அவன்செய்து வந்தநற் றொண்டினுக்
கீடுசெய் திடவல்லார் அறியேம்

பாலனும் குரிசிலை இழந்ததால் தமிழ்த்தாய்
இழந்தனள் படைவீரன் தன்னை!
ஏலாத துன்பத்தை ஏற்றது குடும்பம்!
பெருமையை இழந்தனர் நண்பர்!
மேலான பருவுடல் மறைந்தனன்; அன்னவன்
மிகக் கொண்ட புகழுடம்பு
காலமெல்லாம் உள்ள தமிழர்க்கு நல்ல
கருத்தினைத் தந்து வாழியவே!

இந்நாள் காங்கிரசு

பாடும் கடலும் படுவெயி லால்அழும்
கோடைக் கொடுமை பொறுமல் ஓடிடும்
ஓநாய்க் கூட்டம் உண்ணும் சேற்றுக்
காட்டுக் குட்டை இந்நாள் காங்கிரசு!
நல்ல வர்க்கதில் இடமே இல்லை.
தீய எண்ணம் மனத்தைத் தீய்த்ததால்
சுரண்டும் எண்ணம் தூண்டுதல் செய்ததால்
இரும்ப கப்பையும் கையு மாக
நிறைந்தனர் தீயர்காங் கிரசில்
வறண்டது குட்டையும்! தமிழகம் வாழ்கவே.

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு
முழுப்பக்கத்திற்கு ரூ. 100

அரைப்பக்கத்திற்கு ரூ. 50

கால் பக்கத்திற்கு ரூ. 30

நீண்ட கால விளம்பரத்திற்கும், குறைந்த அளவு விளம்பரத்திற்கும் எழுதுக:

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6--75.	ரூ. 8—50.
ஆறுமாதம்	ரூ. 3—38.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 18 காசுக்குத் தபால் தலை அனுப்புக.

அமைச்சர்,
மா. தண்டபாணி.
குயிலகம் புதுச்சேரி.

"பிசிராந்தையார்"
உரைநடை நாடகம்
குயில் இதழ்தோறும் தொடரும்
எதிர்பார்க்க!

ஆசிரியர்:
பாரதிதாசன்

எழுத்தாளர்க்கு...

கவிதை கட்டுரைகளைக் குயிலின் ஒருபக்க அளவிற்கு, அழகாகத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுக.

வெளியிடப் பெருதனவற்றைத் திரும்பப் பெறப் போதிய அஞ்சற்றலைகள் அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்க்கு...

"குயில்" இதழ்கள் நன்ருகப் பார்வையிட்டே அனுப்பப்படுகின்றன. ஆகையால் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாக முடியாது.

"அமைச்சர்"

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன் புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழனியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.